**இலங்கை பத்திரிகை பேரவை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பத்திரிகை பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பந்தி 1.5 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பத்திரிகை பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிறகு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விசாலம் (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பேரவை இணங்கியிருந்ததா என்பதும்,

- பேரவை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

-----------------------------

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

---------------------------------------------------------------------------------------------------------------------

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்தறை கணக் கீட்டு நியமம் 07 இற்கு இணங்க சொத்தொன்றின் பயன்தரு ஆயுட் காலம் மற்றும் இழிவுப் பெறுமதி என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடும் காலத் தின் இறுதியிலும் மீள்மதிப்பீடு செய்தல் அவசியமான போதிலும், ரூபா | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பில் உத்தியோகத்தகர்களுக் கு விழிப்புனர்வு ஏற்படுத்தபடுவதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கைகள் | சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப்பெறுமதி என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் மீள்மதிப்பீடு |

| | | |
|---|---|---|
| 2,918,392 கிரயமான முழுமை யாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் பயன்படு பொருளாதார ஆயுட்காலம் மீள் மதிப்பீடு செய் யப்படாமல் இலங்கை பத்திரிகை பேரவையினால் பயன்படுத்தப்பட்டுள்ளன. | எடுப்பதற்கு அறிவுறுத் தப்பட்டுள்ளார்கள். | செய்யப்படுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலதன செலவுகளுக்கான அரசாங்க மானிய வருடாந்த கடனழிப்புக்கு (Amortization) ஈடான பிற்போடப்பட்ட வருமானம் (Diferred Income) ரூபா 292,361 தொகை கணக்கீட்டில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | தொடர்பான உத்தியோகத்தகர்களு க்கு விழிப்புனர்வு ஏற்படுத்தபடுவதுடன் இவற்றை சரிசெய்வ தற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அரசாங்க மானிய கட னழிப்பு (Amortization) தொடர்பான பிற் போடப்பட்ட வருமானம் (Diferred Income) சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனா ன தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி 756 | களஞ்சியசாலைகள் மற்றும் அங்குள்ள அவசியமான அவசியமற்றவைகளை அறிக்கையிடுவதற்காக ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 15 ஆம் திகதியளவில் மெய்யாய்வு சபை நியமிக்கப்படல் வேண்டிய போதிலும், மெய்யாய்வுச் சபை 2019 ஜனவரி 25 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்ததுடன் அச்சபையின் நிறைவு அறிக்கை கணக்காய்வுத் திகதியான 2019 மே 03 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்வில்லை | தவிர்க்கமுடியாத காரனங்களால் பேரவையினது அளவைச்சபை உறுப்பினர்கள் லீவு பெற்றுக்கொண் டமையினால் இதனை முடிவுறுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டது. எதிர்காலத்தில் இவை நிவர்த்திச் செய்யப்படும். | அளவைச்சபையான து திசெம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ii)** | நி.பி 880 | அரச உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத் திற்கு இணங்க அரசாங் கத்தின் பணத்தைக் கையே ற்றல் அல்லது அப்பொறுப் பில் இருக்கின்ற உத்தியோ கத்தர்கள், அரசாங்கத்தின் கணக்குகளுக்குரிய கொடுப் பனவு உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்துகின்ற மற்றும் காசோலைகளில் கையொப் பமிடுகின்ற உத்தியோகத் தர்கள், பிணைப்பணம் வைக்க வேண்டியிருந்த போதிலும் பேரவையில் அவ்வாறான கடமைகளில் ஈடுபடுகின்ற இரண்டு உத்தி யோகத்தர்களிடமிருந்து கணக்காய்வுச் செய்யப்பட்ட திகதி 2018 மே 15 வரையிலும் பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. | பேரவை மற்றும் வரிசை அமைச்சில் இடம்பெற்ற கணக்காய்வு குழு கூட்டங்களில் பிணை மற்றும் அதற்குரிய பிரமாணங்கள் தொடர்பாக கலச்துரையாடப் பட்டது. பிணை தொடர்பான தேவைப்பாடுகளுக்க மைவாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச உத்தியோ கத்தர்கள்(பிணை) கட்டளைச் சட்டத் திற்கு இணங்க அரச உத்தியோ கத்தர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப் படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 740,009 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 506,418 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 233,591 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட அரச கொடைகள் ரூபா 5,339,802 ஆக அதிகரித்தமை வருமானத்தில் ரூபா 247,000 இனால் அதிகரிப்பதற்கான காரணமாகும்.

(அ) கடந்த நான்கு வருடங்களிற்கான பேரவையின் பெறுமதி சேர்மானங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **2018 ரூபா** | **2017 ரூபா** | **2016 ரூபா** | **2015 ரூபா** | **2014 ரூபா** |
|---|---|---|---|---|---|
| வரிக்குப்பின் மிகை/குறை | 740,009 | 506,418 | 480,595 | (791,842) | (1,490,967) |
| சேர்ப்பனவுகள் | | | | | |
| சம்பளம் | 12,338,121 | 10,739,610 | 10,606,412 | 10,496,159 | 8,515,485 |
| பெறுமானத்தேய்வு | 1,896,724 | 1,504,025 | 1,424,482 | 1,430,183 | 1,427,924 |
| **பேரவையின் பெறுமதி சேர்மானங்கள்** | 14,234,845 | 12,750,053 | 12,511,489 | 11,134,500 | 8,452,442 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், அதிகரித்த/ வீழ்சியடைந்த சதவீதம் | 12% | 2% | 12% | 32% | |

கடந்த நான்கு வருடங்களிற்கான மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில், 2014 மற்றும் 2015 களில் ஒரு நிதிப்பற்றாக்குறையும் 2016 இலிருந்து 2018 வரை ஒரு மிகையும் அவதானிக்கப்பட்டது. சம்பளம் மற்றும் நிலையான சொத்துக்களுகான பெறுமானத்தேய்வு என்பன சாட்டுதல் செய்யப்பட்ட பின்னரான பெறுமதி சேர்மானமானது 2017 இல் ரூபா 12,750,053 ஆகவும் மீளாய்வாண்டில் ரூபா 14,234,845 ஆக அல்லது 12 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 1981 ஒக்டோபர் 14 இல் 162/5 அ இலக்க அதிவிசேட வர்த்தமானி குறிப்பின்படி, தினசரி பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் தொடர்பிலான பத்திரிகையாளர்களை நெறிமுறைக் கோவையுடன் இணங்கியொழுகுவதனை புலனாய்வு செய்வதற்கான முறைமையொன்று காணப்படுகின்றது. எனினும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளுடன் ஒப்பிடும் போது ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான புலனாய்வு அறிக்கைகளே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அப்புலனாய்வு அறிக்கைகள் ஒழுக்க நெறி நடத்தை தொடர்பாக உள்ளடக்கியிருந்த போதிலும் இவை தொடர்பில் தொடர்ச்சியாக செயற்பாடுகள் எடுப்பதற்கு பணிப்பாளர் சபை நியாயமான கவனத்தினை செலுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்விடயம் குறித்து பணிப்பாளர் சபை அதிக கவனம் செலுத்தும். | புலனாய்வு அறிக்கை மற்றும் நெறிமுறைக் கோவையை பின்பற்றுதல் தொடர்பாக தேவைப்படுத்தப்பட்டுள்ள மதிப்பீடுகனை நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை பொருண்மையான கவனத்தினை செலுத்துதல் வேண்டும். |
| (ii) 2010 மே 14 ஆம் திகதிய ஜனாதிபதி செயலக காரியாலய கடித இலக்கம் சீஏ/1/17/1 இன் 1 ஆம் பந்தி மற்றும் 2012 ஜுலை 10 இன் பொது முயற்சிகள் குழுவின் 7 ஆவது நெறிப்படுத்தல் என்பவற்றில் வலியுறுத்தப்பட்டிருந்ததன்படி பேரவை தனது செயற்பாட்டை அரச கட்டிடத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும். எனினும் பேரவை தொடக்க காலத்தில் இருந்து 40 வருட தனியார் வாடகை கட்டிடங்களில் தனது செயற்பாட்டை மேற்கொள்கின்றது. 2010 இல் இருந்து 2018 வரை ரூபா 19,122,400 கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. அரச கட்டிடமொன்றை கொள்முதல் செய்வதில் உள்ள பின்னடைவினால் இச்சூழ்நிலை உருவாகியுள்ளது என பேரவையின் தலைவர் கணக்காய்வுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார். | வரிசை அமைச்சு மற்றும் பேரவையின் நேரடி ஈடுபாட்டுடன் பல சந்தர்ப்பங்களில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் பதில்கள் பெறப்படவில்லை. இதற்குப் பொருத்தமான ஒரு அரசு கட்டிடத்தைக் கண்டுபிடிக்க கண்காணிப்பு செய்யப்பட்ட போதிலும், ஒரு கட்டிடத்தைக் கண்டுபிடிப்பது ஒரு சவாலாக வந்துள்ளது. | மேலதிக கலந்துரையாடல்கள் அரசு நிறுவனங்களுடன் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) இலங்கை பத்திரிகை பேரவை மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பான ஒப்பீட்டு கற்கைக்காகவும் ஆராய்ச்சி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காகவும் ரூபா 200,000 தொகையொன்று 2015 நவம்பர் 24 இல் களணி பல்கலைக்கழகத்தின் வெகுஜன ஊடகத்துறைப் பிரிவிற்கு செலுத்தப்பட்டிருந்தது. அக்கொடுப்பனவு செய்து ஒரு மாத காலத்திற்குள் பேரவைக்கு பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை பேரவைக்குச் சமர்ப்பிக்கப்ட்டிருக்கவில்லை. | அறிக்கையைப் பெற மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் | அறிக்கையைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் அந்நிறுவனங்களுக்கான பிரசைகள்/ சேவைப்பெறுநர் பட்டயத்தை அறிமுகப் படுத்த வேண்டிய போதிலும், பேரவை அதுபற்றி விழிப்புணர்வடைந்திருக்கவோ அல்லது இவ் ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைளையோ எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிரசைகள்/ சேவைப் பெறுநர் பட்டயத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்த வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (i) பத்திரிகை பேரவை சட்டத்தின் பிரிவு 8 இன் பிரகாரம், பத்திரிகை நிருபர்களுக்கான செயலமர்வுகளை நடாத்துதல், நூல்களை அச்சிடல், டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் பத்திரிகை நிருபர்களுக்கான அகராதி தயாரித்தல் போன்றன குறிக்கோள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளாக இருந்தன. மீளாய்வாண்டில் அச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 29,094,802 பெறுமதியான மானியங்களில் ரூபா 4,063,736 அல்லது 14 சதவீதம் மாத்திரமே செலவு செய்யப்பட்டிருந்தது. | கோரப்பட்ட தொகையை விட ஒரு மில்லியனுக்கும் குறைவான ஏற்பாடுகள் கிடைத்தன. கட்டிட வாடகை மற்றும் சம்பளம் போன்ற செலவுகளைச் செலுத்திய பின்னர், நிலுவைத் தொகை சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. | பேரவையின் நோக்கங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற நடவடிக்கைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ii) பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் படி சகல பத்திரிகைகளும் பத்திரிகை பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் அவ் | அச்சிடும் செலவு அதிகரித்தமையால் அச்சிடும் செய்தித்தாள்கள் | பதிவு செய்யப்படாமல் சந்தையில் புழக்கத்தில் விடப்பட்ட செய்தித்தாள்களுக்கு |

| | | |
|---|---|---|
| வாறு பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பாக தேவையான சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரச்சட்டத்தின் 30ஆவது பிரிவின்படி பேரவைக்கு அதிகாரம் காணப்பட்ட போதிலும், இது தொடர்பான விதிமுறை களை பேரவை தயாரித்திருக்கவில்லை. பதிவு செய்யப்படவேண்டிய பத்திரிகை களின் எண்ணிக்கை 300 ஆக பேரவை மதிப்பீடு செய்திருந்த போதிலும், 2017 மற்றும் 2018 களில் பதிவுச் செய்யப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை முறையே 199 மற்றும் 118 ஆக காணப்பட்டது. எனினும், பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பான ஆய்வு பேரவையினால் செய்யப்பட்டிருக்வில்லை. | குறைக்கப்பட்டுள்ளன. (மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை 300ஆக காணப்பட்டபோதிலும், செய்தித்தாள்கள் 75 ஆகவும் மற்றவை பருவகால சஞ்சிகைகளாகவும் இருந்தன) | எதிராக பேரவையால் விசாரணை நடத்தப்படல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு நிதியக் கணக்குகளுக்காக 1993 நவொம்பர் 05 மற்றும் 2009 செப்தெம்பர் 07 திகதிகளில் முறையே ஆய்வு நிதியம் மற்றும் கடன் நிதியம் என பெயரிடப்பட்டு திறக்கப்பட்ட இரண்டு வங்கி கணக்குகள் பேரவையால் பராமரிக்கப்பட்டுள்ளது. இந்நிதியக்கணக்குகளை பராமரிப்பதற்கு பொதுப்பாதீட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினது அனுமதிக்காக 2017 இல் கடிதமொன்றினால் கோரப்பட்டிருந்த போதிலும், அவ் அனுமதி 2019 மே 03 திகதி வரையிலும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அவ்வங்கிக் கணக்குகளின் மீதிகள் முறையே ரூபா 3,397,953 மற்றும் ரூபா 1,685,259 ஆக காணப்பட்டன. | "நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின்" செயலாளருடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன, மேலும் ஆராய்ச்சி நிதி மற்றும் கடன் நிதி ஆகிய இரண்டு கணக்குகளுக்கும் அனுமதி வழங்குவதற்கான வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், அவ்வப்போது வரிசை அமைச்சு வழங்கிய ஆலோசனைகளின் பேரில், 2016/05/27, 2016/08/02, 2017/12/19, 2018/05/10, 2018/06/18 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் மூலம் இந்த விடயம் தொடர்பாக வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. | அனுமதி பெறப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒரு நடவடிக்கையாக உள்ளடக்கப்பட் டிருந்த பாடசாலை மாணவர்களின் சிந்தனை மற்றும் எழுத்துத் திறனை மேம்படுத்துவது குறித்தான | 2019 இன் 2 வது காலாண்டில் பூர்த்திச் செய்யப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க முயற்சிகள் |

| | | |
|---|---|---|
| கட்டுரை போட்டி நடாத்தப்படவில்லை. ரூபா125,000 ஒதுக்கீட்டில் ஊடகவியலாளர்களின் ஆர்வத்தை மேம்படுத்துதல் மற்றும் 50 பத்திரிகைத்துறை கலந்துரை யாடல்களை நடாத்த திட்டமி டப்பட்டிருந்த போதிலும், ரூபா 4,500 செலவீட்டில் 07 கலந்துரையாடல்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | | மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாண இலக்கம் 133 மற்றும் 134 இன் பிரகாரம், பேரவையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி பேரவையின் அனுமதிக் கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பேரவை மற்றும் வரசை அமைச்சகங்களில் நடைபெற்ற கணக்காய்வு குழு கூட்டங்களில் இச்சேவையை அமைச்சின் உள்ள கக் கணக்காய்வுப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது, எனவே பேரவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி காணப்படவில்லை. | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலிருந்து உதவியைப்பெற வேண்டும். |

**4.3 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் காலாண்டிற்கு ஒன்று வீதம் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு காலத்தில் இரு குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | குறைந்தது காலாண்டுக்கு ஒரு முறை என, வருடத்திற்கு நான்கு கூட்டங்கள் நடத்தப்படல் வேண்டும். |

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 39 சதவீதம் முதல் 132 சதவீதம் வரை குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமை, பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. | எதிர்காலத்தில் பாதீட்டை துல்லியமாக தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முகாமைக் கட்டுப்பாட்டின் விளைதிறனான கருவியாக பாதீடு பயன்படுத்தப்படல் வேண்டும். |

**4.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி இலக்குகள் நிகழ்ச்சி நிரல்களுக்கு இணங்க ஒவ்வொரு பகிரங்க நிறுவனமும் செயற்படல் வேண்டிய போதிலும், பேரவை தனது செயற்பரப்பின் கீழுள்ள அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. மேலும், செயல் நடவடிக்கை திட்ட ஏற்பாடுகளுக்கு ஒதுக்குதல், தேவைப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களை இனங்காணுதல், நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களினை அடைவதில் அக்கறையுடைய தரப்பினரை இனங்காணுதல் போன்றவை மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் இணக்கங்கள் செய்யப்படும். | ஒவ்வொரு பகிரங்க நிறுவனமும் 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |